அலகு
1

# நமது பூமி

## கற்றல் நோக்கங்கள்



**மாணவர்கள் இப்பாடத்தைக் கற்பதன் வாயிலாக:**

❖ பேரண்டம் பற்றி அறிந்துகொள்வர்.
❖ சூரியக் குடும்பம் பற்றித் தெரிந்துகொள்வர்.
❖ பூமியைப் பற்றித் தெரிந்துகொள்வர்.

TC986E

மாலையில், பள்ளியிலிருந்து வீடு திரும்பிய இமயன் தன் தந்தையின் வருகைக்காக காத்திருந்தான். அவனது தந்தை ஒரு முன்னணி வங்கி ஒன்றின் ஊழியராக உள்ளார்.

**இமயன்** : வாருங்கள் அப்பா! (இமயன் ஓடிவந்து தன் தந்தையைக் கட்டிக்கொண்டான்)

**தந்தை** : என்ன இமயன், நீ தின்பண்டம் சாப்பிட்டாயா?

**இமயன்** : சாப்பிட்டுவிட்டேன் அப்பா! என் சமூக அறிவியல் ஆசிரியர் நாளை எங்கள் வகுப்பில் பூமியைப் பற்றி சொல்லிக் கொடுக்கப்போகிறார். தயவுசெய்து பூமியைப் பற்றிச் சொல்லுங்கள் அப்பா!

**தந்தை** : சரி, நான் சொல்கிறேன் கேள்.



5th_Social_Science_TERM-I_TM_UNIT-1.indd 141 2/24/2020 3:08:32 PM

**இமயன் :** பூமி எப்படி உருவானது?

**தந்தை :** ஏறத்தாழ 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நம் சூரியக் குடும்பம் வாயுக்கள் மற்றும் தூசுக்களால் உருவானது. இதனையே நாம் **சூரிய நெபுலா** என்று அழைக்கிறோம். ஈர்ப்பு விசை சிதைவின் காரணமாக நெபுலாவில் உள்ள இத்துகள்கள் (Particles) சூரியனை மையமாகக் கொண்டு சுழல ஆரம்பித்தன. இத்துகள்களே பின்னாளில் **கோள்கள்** ஆகின. இவ்வாறு நமது **புவிக்கோள்** தோன்றியது.

சூரிய நெபுலா



**இமயன் :** அப்படியா! பேரண்டம் பற்றி விளக்குகிறீர்களா அப்பா?

விண்மீன் மண்டலம்





5th_Social_Science_TERM-I_TM_UNIT-1.indd 142 2/24/2020 3:08:33 PM

**தந்தை :** **பேரண்டம்** என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பரந்தவெளி ஆகும். இப்பேரண்டமானது கோடிக்கணக்கான **விண்மீன் திரள் மண்டலங்கள், விண்மீன்கள், கோள்கள், குறுங்கோள்கள், வால் நட்சத்திரங்கள், விண்கற்கள், எரிகற்கள்** மற்றும் **துணைக்கோள்களை** உள்ளடக்கியுள்ளது. பிரபஞ்சத்தின் துல்லியமான அளவு இன்னும் முழுவதுமாக அறியப்படவில்லை. பிரபஞ்சம் இன்னும் வெளிப்புறமாக விரிவடைந்து கொண்டேதான் இருக்கிறது என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

**இமயன் :** அப்பா, விண்மீன் திரள் மண்டலம் என்பது என்ன?

**தந்தை :** **விண்மீன் திரள் மண்டலம்** என்பது நட்சத்திரங்களின் தொகுப்பு ஆகும். நமது **விண்மீன் மண்டலம் (பால் வழி மண்டலம்)** எண்ணிலடங்கா விண்மீன் மண்டலங்களுள் ஒன்றாகும்

பால் வழி மண்டலம்



**இமயன் :** சரி அப்பா. **சூரியக் குடும்பம்** என்றால் என்ன?

**தந்தை :** **சூரியக் குடும்பத்தில்** சூரியன் உட்பட எட்டு கோள்கள், மற்றும் அதன் துணைக் கோள்கள், குறுங்கோள்கள், எரிகற்கள், வால்நட்சத்திரங்கள், தூசு ஆகியவை உள்ளன. இவைகள் அனைத்தும் அதன் வலுவான ஈர்ப்பு விசையினால் பிணைக்கப்பட்டுள்ளன.

**இமயன் :** ஆச்சியமாக இருக்கிறதே அப்பா! நமது **சூரியக் குடும்பத்தை** பற்றிச் சொல்லுங்களேன்.


**தந்தை :** நமது சூரியக் குடும்பத்தில் 8 கோள்கள் உள்ளன. அவை:

1. புதன்
2. வெள்ளி
3. பூமி
4. செவ்வாய்
5. வியாழன்
6. சனி
7. யுரேனஸ்
8. நெப்டியூன்



5th_Social_Science_TERM-I_TM_UNIT-1.indd 143 2/24/2020 3:08:33 PM

## சூரியக் குடும்பம்






**உள்–பாறை கோள்கள்** புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் **திடக்கோள்கள்** என அழைக்கப்படுகின்றன. **வெளிக்கோள்கள்** வாயுக்களால் ஆனது. அவை வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன். **உறைந்திருக்கும்** கோள்கள் யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகும்.

**இமயன்** : பூமி எங்கே இருக்கிறது அப்பா?

**தந்தை** : பூமி சூரியனிடமிருந்து **மூன்றாவதாக** அமைந்துள்ள **ஐந்தாவது பெரியக் கோளாகும்**.

**இமயன்** : பூமி தன் அச்சில் தன்னைத்தானே சுற்றிக்கொண்டும் அதே வேளையில் சூரியனைச் சுற்றி சுழன்று கொண்டும் வலம் வருகிறது என்று கூறுகிறார்களே, உண்மையா?

**தந்தை** : ஆம். பூமிக்கு **இரண்டு இயக்கங்கள்** உள்ளன. அவை:

1. **சுழலுதல்**
2. **சுற்றுதல்**




## சுழலுதல்

பூமி தன் அச்சில் தன்னைத்தானே சுழலுவதை, **சுழலுதல்** என்று அழைக்கப்படுகின்றது. பூமி தன்னைத்தானே சுழலுவதன் காரணமாக **இரவும் பகலும்** ஏற்படுகின்றன.

**பகலும் இரவும்**





5th_Social_Science_TERM-I_TM_UNIT-1.indd 145 2/24/2020 3:08:34 PM

## சுற்றுதல்

பூமி தனது அச்சில் 23½° சாய்வாக அமைந்து தன்னைத்தானே சுழன்றுக்கொண்டு, அதே வேளையில் சூரியனைச் சுற்றி வலம் வருவதை, **சுற்றுதல்** என்று அழைக்கப்படுகின்றது. பூமி, சூரியனை சுற்றி வலம் வருவதால் **பருவக்காலங்கள்** ஏற்படுகின்றன

1

கோடைக்காலம்
(மார்ச் முதல் மே வரை)

2

தென்மேற்கு பருவக்காற்று காலம்
(ஜூன் முதல் செப்டம்பர் வரை)

3

வடகிழக்கு பருவக்காற்று காலம்
(அக்டோபர் முதல் நவம்பர் வரை)

4

பனிக்காலம்
(டிசம்பர் முதல் பிப்ரவரி வரை)

செயல்பாடு
நாம் செய்வோம்

**பூமியின் வடிவமைப்பு மாதிரியை செய்துபார்.**



**தந்தை :** உயிர் வாழத் தேவையான **நிலம், காற்று** மற்றும் **நீர்** பூமியில் மட்டுமே உள்ளது.

**இமயன் :** ஓ! அப்படியா?சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தொலைவு எவ்வளவு?

**தந்தை :** சூரியனுக்கும் பூமிக்கும் இடையே ஏறத்தாழ 150 மில்லியன் கிலோமீட்டர் தூரம் உள்ளது.

**இமயன் :** மேலும் கோள்களைப் பற்றி வியப்பான தகவல்கள் உள்ளனவா அப்பா?

**தந்தை :** புதனும், வெள்ளியும் சூரியனுக்கு அருகில் உள்ள கோள்கள் ஆகும். பூமிக்கு அடுத்தபடியாக செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியவை உள்ளன. சூரியனுக்கு அருகில் உள்ள கோள்கள் மிகவும் வெப்பமானவை. சூரியனிலிருந்து மிகத் தொலைவில் உள்ள கோள்கள் மிகவும் குளிர்ச்சியாக உள்ளன. **புதன் கோள்** மற்றக் கோள்களைவிட மிகவும் சிறியது. **வியாழன் கோள்** மற்றக் கோள்களைவிட மிகவும் பெரியது.



**வெள்ளியும்,பூமியும் "இரட்டைக்கோள்கள்"** எனஅழைக்கப்படுகின்றன. **செவ்வாய் "செந்நிறக் கோள்"** என அழைக்கப்படுகிறது. மேலும் **பூமி நீர்க்கோளம்** என அழைக்கப்படுகிறது. **வளையங்களைக்** கொண்டகோள் **சனி** ஆகும்.

**இமயன் :** மிகவும் அற்புதம்! பூமியில் நாம் எங்கு வாழ்கிறோம்?

**தந்தை :** பூமியின் மேற்பரப்பில் நாம் வாழ்கிறோம். இது 7 கண்டங்களையும், 5 பெருங்கடல்களையும் உள்ளடக்கியது.

**இமயன் :** 7 கண்டங்களா? அவை என்னென்ன?

**தந்தை :** சொல்கிறேன். அவை;

**ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிக்கா, ஐரோப்பா** மற்றும் **ஆஸ்திரேலியா**.

**இமயன் :** எது பெரிய கண்டம்?

**தந்தை :** நாம் வாழும் **ஆசியக் கண்டம்தான்** அனைத்திலும் **மிகப் பெரியது. மிகச்சிறிய** கண்டம் **ஆஸ்திரேலியா** ஆகும். அண்டார்டிக்கா கண்டம் பனி நிறைந்தது.

நாம் அறிந்து கொள்வோம்.


**A4 NoSE**

(A1) ஆசியா (Asia) (A2) ஆப்பிரிக்கா (Africa) (A3) அண்டார்டிக்கா (Antartica) (A4) ஆஸ்திரேலியா (Australia) (No) வட அமெரிக்கா (North America) (S) தென் அமெரிக்கா (South America) (E) ஐரோப்பா (Europe )



5th_Social_Science_TERM-I_TM_UNIT-1.indd 147 2/24/2020 3:08:35 PM

## கண்டங்கள் மற்றும் பெருங்கடல்கள்



**நாம் அறிந்து கொள்வோம்.**

கண்டங்களின் மேற்பரப்பு ஆனது பலவகையான நிலத்தோற்றங்கள் கொண்டுள்ளன. அவை: **சமவெளிகள், பீடபூமிகள், மலைகள், கடற்கரைச் சமவெளிகள், பள்ளத்தாக்குகள், பாலைவனங்கள்** மற்றும் **தீவுகள் போன்றவைகளாகும்.** உலகிலேயே **மிக உயரமான சிகரம் எவரெஸ்ட் (8848மீ).** இது **இமய மலையில்** அமைந்துள்ளது.

**இமயன் :** அப்பா, ஐந்து பெருங்கடல்களின் பெயர்களை கூறுங்கள்.

**தந்தை :** **பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென் பெருங்கடல்** மற்றும் **ஆர்க்டிக் பெருங்கடல்.** நமது பூமி 71% நீராலும் 29% நிலத்தால் சூழப்பட்டு உள்ளது 96.5% நீர், உப்பு நீராக (saline) உள்ளது. 2.5% சதவீதம் நீர் மட்டுமே நன்னீராக உள்ளது. இதில் 1% மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.

பெருங்கடல்களின் சராசரி ஆழம் 3800 மீ ஆகும். பெருங்கடல்களில் மிக ஆழமான இடம் **மரியானா அகழி** ஆகும். இது **பசிபிக் பெருங்கடலில்** அமைந்துள்ளது.

**இமயன் :** நன்றி அப்பா. இன்று உங்களிடமிருந்து பூமியை பற்றி நிறைய வியப்பூட்டும் செய்திகளை தெரிந்து கொண்டேன். இப்போது நான் படிக்கப் போகிறேன்.

**தந்தை :** சரி இமயன், படிப்பதற்குச் செல்.

## கலைச்சொற்கள்

| | |
|---|---|
| **துகள்கள்** | :Particles |
| **உப்பு நீர்** | :Saline water |
| **அகழி** | :Trench |



## மீள்பார்வை

- பேரண்டமானது கோடிக்கணக்கான விண்மீன் திரள் மண்டலங்கள், விண்மீன்கள், கோள்கள், குறுங்கோள்கள், வால் நட்சத்திரங்கள், விண்கற்கள், எரிகற்கள் மற்றும் துணைக்கோள்களை உள்ளடக்கியுள்ளது.
- பூமி சூரியனிடமிருந்து மூன்றாவதாக அமைந்துள்ள ஐந்தாவது பெரியக்கோளாகும்.



5th_Social_Science_TERM-I_TM_UNIT-1.indd 149 2/24/2020 3:08:36 PM



# மதிப்பீடு



ZAJMIC

## I. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பூமிக்கும், சூரியனுக்குமிடையே உள்ள தொலைவு ___________ ஆகும்.
2. பூமியின் சுழற்சியினால்___________ ஏற்படுகிறது.
3. பனியால் சூழப்பட்டுள்ள கண்டம் ___________ ஆகும்.
4. ___________ மிகப் பெரிய கண்டமாகும்.
5. செந்நிறக் கோள் என அழைக்கப்படுவது ___________.
6. நம் பூமி ___________ சதவீதம் உப்பு நீரால் சூழப்பட்டுள்ளது.

## II. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1 | மிகச்சிறிய கண்டம் | பூமி சுழலுதல் |
| 2 | நீலக் கோள் | ஆஸ்திரேலியா |
| 3 | நெப்டியூன் | பூமி சுற்றுதல் |
| 4 | பருவகாலங்கள் | பூமி |
| 5 | பகலும் இரவும் | தொலைவான கோள் |

## III. பின்வருவனவற்றிற்கு விடையளிக்க.

1. பேரண்டம் பற்றி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.
2. சூரியக் குடும்பம் வரையறு.
3. பூமி எப்படி உருவானது?

4. வேறுபடுத்துக: சுற்றுதல் மற்றும் சுழலுதல்

5. புவியில் எத்தனைப் பெருங்கடல்கள் உள்ளன?

### V. விரிவான விடையளிக்க.

1. சூரியக் குடும்பம் பற்றி விளக்குக.
2. புவிக்கோளின் தன்மை பற்றி விவரி.
3. கண்டங்களைப் பற்றி விவரி.

செயல்பாடு

## செயல்திட்டம்

**கோள்களின் படங்களைச் சேகரித்து ஒட்டவும்.**